செ.வெ.எண்: 692

# அரசு செய்தி வெளியீடு – 22.8.2008

இன்று காலை நாளேடு ஒன்றில் – திருவள்ளூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த பிரேம லதா என்பவரின் மூத்த மகள் யுவஸ்ரீ என்பவர் வடகரை அரசு ஆதி திராவிட நலத் துறை பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் படித்து, ப்ளஸ் 2 தேர்வில் 1018 மதிப்பெண்கள் பெற்று – விழுப்புரம் அண்ணா பல்கலைக் கழகக் கல்லூரியில் பொறியியல் படிக்க இடம் கிடைத்திருப்பதாகவும், ஆனால் கல்லூரியில் சேர 25 ஆயிரம் ரூபாய் இல்லாத நிலையில் வறுமை காரணமாக கல்லூரியில் சேர வில்லை என்றும் வந்திருந்த செய்தியினைப் படித்த மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்பு கொண்டு, இன்றைய தினமே அந்த மாணவியைச் சந்தித்து 25 ஆயிரம் ரூபாய் நிதியினை வழங்கிட வேண்டுமென்றும் – இந்த நிதி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9